1973 பிப்ரவரி 7]

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் செயல் படுவதற்கு விசேஷமாக ஏதாவது மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் எவ்வளவு செலவழிக்கும் என்று அரசு கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் போடுவாரானால், எல்லா விவரத்தையும் சேகரித்துத் தர நான் முயற்சி எடுத்துக் கொள்வேன்.

Deputy Commissioner of Labour, Mylapore

* 51. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that no Deputy Commissioner of Labour has been posted to the Labour Office at Mylapore, Madras from February 1972 onwards;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken or proposed to be taken to fill the post?

தொழிலாளர் நல துணை ஆணையாளர், மயிலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மயிலாப்பூரில் உள்ள தொழிலாளர் நல அலுவலகத்தில் 1972 பிப்ரவரியிலிருந்து தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் எவரும் நியமிக்கப் படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அந்தப் பதவியை நிரப்ப எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) சென்னையில் தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளராகப் பணியாற்றிய திரு. சி. ஆர். விஸ்வநாதன் தொடக்கத்தில் 21—2—1972 முதல் ஒரு மாத காலத்துக்கு மட்டுமாகக் குறுகிய காலத்துக்கு மருத்துவ விடுப்பில் சென்றார். தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடைய தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையர்களின்

பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு வந்ததால், அப்பதவி தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளரது (ஆய்வுகள்) கூடுதல் பொறுப்பில் வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து திரு. விஸ்வநாதன் தனது மருத்துவர்களுடைய ஆலோசனைப்படி தமது விடுப்பை நீட்டித்தபடியால், அப்பதவி தொடர்ந்து கூடுதல் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) அப்பதவி நிரப்பட்டுள்ளது.

Railway Wagons for Salt Movements

* 55. *Q.*—THIRU G. SWAMINATHAN and THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that salt has piled up during the month of August, 1972 at Vedaranyam, consequent on non-availability of wagons to move the same from that place; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

உப்பை எடுத்துச் செல்வதற்கு இரயில் பெட்டிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் :
திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) வேதாரண்யத்திலிருந்து உப்பை எடுத்துச் செல்வதற்குச் சரக்கு இரயில் பெட்டிகள் (Wagons) இல்லாத காரணத்தால் அந்த இடத்தில் 1972, ஆகஸ்ட் திங்களில் உப்பு எடுத்துச் செல்லப்படாமல் குவிந்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) வேதாரண்யம் பகுதிகளில் இருந்து உப்பு ஏற்றுமதிக்கு போதுமான இரயில் வேகன்கள் (wagons) ஒதுக்க வேண்டி தென் இயில்வே நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக தற்போது நிலைமை மிகவும் அபிவிருத்தியடைந்துள்ளது.